1993 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 163. திரு. கே. செல்வராஜ் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. கே.பி. ராஜு கேட்கிறார். மாண்மிகு கல்வியமைச்சர்.

163—

நீலகிரி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி அமைத்தல்.

*11142—திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு சார்பில் நீலகிரி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. பி. ராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் உத்தேசம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீலகிரி மாவட்டம் எங்களுடைய கோவை மாவட்டத்திற்கு அருகாமையில் உள்ள மாவட்டம். அங்கே இருக்கின்ற மாணவர்கள் அத்தனை பேரும் கோவையில் இருக்கின்ற கல்லூரிகளில் தான் வந்து படிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் மலைவாழ் மக்களும் பின்தங்கிய மக்களும் அதிகமாக வாழ்கிற காரணத்தால், சிறப்புத் தன்மையில் இந்த ஆண்டு அந்தப் பகுதியில் பொறியியல் கல்லூரியை ஏற்படுத்தினால் அங்கே வாழ்கிற நீலகிரி மாவட்ட மக்களுக்கு நன்மையாகவும் இருக்கும். எங்களுக்கும் சற்று சுமை குறையும் என்பதை கருத்தில் கொண்டு, இந்த ஆண்டில் அதை அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் எந்தவிதமான பொறியியல் கல்லூரியும் அமைக்கின்ற கருத்துரு இல்லை. பொறியியல் கல்லூரி மட்டுமல்ல, எந்த ஒரு கல்லூரியும் அமைக்கின்ற கருத்துரு இல்லை.